## குழந்தை மற்றும் குடும்ப சுகாதார சேவையின் தொடர்பு விவரங்கள்

StEPS Statewide Eyesight Preschooler Screening

SHPN (NKF) 130158 - Tamil

# StEPS

## மாநிலம் தழுவிய பாலர் பள்ளியினர் கண்பார்வைத் திறன் பரிசோதனை

Statewide Eyesight Preschooler Screening



## StEPS நிகழ்ச்சித் திட்டத்தைப் பற்றி நீங்கள் அறிய வேண்டியது என்ன?

NSW GOVERNMENT | Health

## StEPS என்றால் என்ன?

StEPS நிகழ்ச்சித் திட்டம் என்பது நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறையின் முன்னெடுப்புத் திட்டமாகும். இது 4 வயது குழந்தைகள் அனைவருக்கும் இலவச பார்வைத்திறன் பரிசோதனை மதிப்பீட்டை அளிக்கிறது.

## ஏன் என் குழந்தைக்கு பார்வை பரிசோதனை தேவைப்படுகிறது?

- குழந்தைகள் தமது கண்பிரச்சினைகளைப் பற்றி மிக அரிதாகவே முறையீடு செய்கின்றனர்
- குழந்தைகள் தங்களால் சரியாகப் பார்க்கமுடியவில்லை என்பதை உணராமல் இருக்கலாம்
- சில குழந்தைகளுக்கு ஒரு கண்ணால் நன்றாகப் பார்க்க முடியும். ஆனால் மற்ற கண்ணில் மிக மோசமான பார்வைத்திறன் இருக்கலாம்
- குழந்தைகளின் கண்கள் பார்ப்பதற்குச் சரியாக இருக்கலாம், ஆகவே பெற்றோர்கள் /பராமரிப்பாளர்கள் தங்கள் குழந்தை நன்றாகப் பார்க்க முடியும் என நினைக்கலாம். ஆனால் சில குழந்தைகளுக்கு பார்வைத்திறனில் பிரச்சினை இருக்கக்கூடும்
- ஒரு தடவைக்கு ஒரு கண் என்ற வகையில் குழந்தையின் பார்வைத்திறனை பரிசோதனை செய்வதுதான் ஒரு குழந்தைக்குப் பார்வைத்திறனில் பிரச்சினை இருக்கிறதா என்பதைச் சொல்வதற்கு ஒரே வழியாகும்.



## உங்களுக்குத் தெரியுமா?

- குழந்தைக்கு 'சோம்பேறிக்கண்' (lazy eye) எனப்படும் குறைபாடு இருந்து அதற்குத் தகுந்த சிகிச்சை அளிக்கப்படவில்லையென்றால், அது கடுமையான வகையில் பார்வைத்திறன் இழப்புக்கோ அல்லது குருட்டுத்தன்மைக்கோ வழிவகுக்கும்.
- குழந்தை ஒன்றுக்கு பார்வைத்திறனின் பிரச்சினை இருக்கும்பட்சத்தில், எவ்வளவு சீக்கிரம் பிரச்சினை கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறதோ, அவ்வளவுக்கு பார்வைத்திறனுக்கு நல்லதாகும்
- சிறுவயதில் பெற்றோர்கள் கண்கண்ணாடிகள் அணிந்திருந்தாலோ அல்லது பார்வைத்திறனில் பிரச்சினைகள் இருந்திருந்தாலோ, அவர்களுடைய குழந்தைகளுக்கு பார்வைத்திறனில் பிரச்சினைகள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன.
- எட்டுவயதுக்குப் பிறகு, குழந்தைப்பருவ பார்வைக் கோளாறுகளுக்குச் சிகிச்சை அளிக்க முடியாது. குழந்தை தனது வாழ்க்கையின் மீதிக்காலத்தை குறைந்த பார்வைத்திறனோடுதான் கழிக்க வேண்டியிருக்கும் - கண்கண்ணாடிகளால் எந்தவித பயனும் இருக்காது.
- குறைந்த எடையுடன் பிறந்த மழலைகள் மற்றும் நரம்பியல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உள்ள குழந்தைகளுக்குக் கண் பிரச்சினைகள் வருவதற்கான அதிக அபாயம் உள்ளது.

## என்னுடைய குழந்தைக்குப் பார்வைத்திறன் பரிசோதனை செய்யப்படுவது அவசியமா?

அனைத்துக் குழந்தைகளும் பள்ளிக்குச் செல்ல ஆரம்பிக்குமுன் தங்களுடைய பார்வைத்திறனைப் பரிசோதித்துக்கொள்ள வேண்டுமென நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறை அறிவுறுத்துகிறது. அத்துடன் 4 வயதுடைய அனைத்துக் குழந்தைகளும் இந்த பார்வைத்திறன் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமெனவும் அது அதிகமாகப் பரிந்துரைக்கிறது.

## என்னுடைய குழந்தை எவ்வாறு StEPS நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொள்ள முடியும்?

உங்கள் உள்ளூர் சுகாதார மாவட்டம் பாலர் பள்ளிகளையும், குழந்தை பராமரிப்பு மையங்களையும் இலக்குவைத்து, நான்கு வயது குழந்தைகள் அனைவருக்கும் **இலவசப்** பார்வைத்திறன் பரிசோதனையை அளிக்கிறது. உங்கள் குழந்தையின் பார்வைத்திறன் பரிசோதனையை நடத்த, நீங்கள் ஒப்புதல் படிவம் ஒன்றை நிரப்பி, உங்கள் குழந்தையின் பாலர் பள்ளி/குழந்தை பராமரிப்பு மையத்தில் கொடுக்கவும்.

உங்கள் உள்ளூர் குழந்தை மற்றும் குடும்ப சுகாதார சேவை மூலம் உங்கள் நான்கு வயது குழந்தையின் பார்வைத்திறன் பரிசோதனையை **இலவசமாகப்** பெற முடியும். உங்கள் உள்ளூர் குழந்தை மற்றும் குடும்ப சுகாதார சேவையின் தொடர்பு விவரங்களை இந்த கையேட்டின் பின்புறத்தில் காணலாம்.



## என்னுடைய குழந்தைக்கு பார்வைத்திறனில் பிரச்சினை இருக்கிறது என்பது எப்படி எனக்குத் தெரியும்?

பார்வைத்திறன் பரிசோதனை செய்யப்பட்ட குழந்தையின் பெற்றோர்கள் பராமரிப்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய குழந்தையின் பார்வைத்திறன் பரிசோதனை மதிப்பீட்டின் முடிவுகள் தெரிவிக்கப்படும். அதில் பார்வைத்திறன் குறைபாடு ஏதும் கண்டுபிடிக்கப்பட்டால், உங்கள் உள்ளூர் குழந்தை மற்றும் குடும்ப சுகாதார சேவை உங்களைத் தொடர்பு கொண்டு, ஒரு கண்மருத்துவ நிபுணரால் உங்கள் குழந்தையின் கண்கள் முழுமையாகப் பரிசோதிக்கப்படவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும்.

குழந்தைகளின் கண்கள் ஏறக்குறைய 8 வயது வரை தொடர்ந்து உருவாகிக்கொண்டு வருவதால், இந்த உருவாக்க வருடங்களில் பொதுவாக ஒவ்வொரு குழந்தையின் பார்வைத்திறன் நன்றாக உருவாகியிருக்கிறதா என்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

StEPS நிகழ்ச்சித்திட்டம் என்பது பார்வைத்திறன் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டமேயன்றி முழுமையாக் கண்டறியும் சோதனையைத் தருவதல்ல. உங்கள் குழந்தையின் பார்வைத்திறனில் உங்களுக்கு கவலைகள் ஏதாவது இருந்தால், ஒரு கண்மருத்துவ நிபுணரால் உங்கள் குழந்தையின் கண்கள் முழுமையாகப் பரிசோதிக்கப்படவேண்டுமெனப் பரிந்துரைக்கப்படுகிறீர்கள்.